வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
## Term Examination, March- 2018

| தரம் :- 13 (2018) | கிறிஸ்தவ நாகரிகம் I | நேரம் :- 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

❖ *1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் (1), (2), (3), (4), (5), என எண்ணிடப்பட்ட விடைகளில் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை தரப்பட்டுள்ள விடைத்தாளில் புள்ளடி (X) இடுவதன் மூலம் காட்டுக.*

01. மீட்பின் வரலாறு ஆரம்பமாவது
    1) ஆபிரகாமின் அழைப்புடன்
    2) காயீன் ஆபேல் கதை மூலம்
    3) இறைவன் ஆதிப்பெற்றோருடன் செய்து கொண்ட உடன்படிக்கை மூலம்
    4) இறைவன் நோவாவுடன் செய்து கொண்ட உடண்படிக்கை மூலம்
    5) இறைவன் மோசேயுடன் செய்து கொண்ட உடண்படிக்கை மூலம்

02. யூப்பிரதீஸ்-தைக்கிரிஸ் ஆற்றங்கரை நாகரிகம் பற்றிய பொருத்தமற்ற கூற்று
    1) ஆட்சி செய்யும் உரிமையைக் கடவுளே அரசனுக்கு வழங்கியிருப்பதாக மக்கள் நம்பினர்.
    2) ஆட்சி நிர்வாகத்திற்குத் தேவையான நிதி வரிமூலம் பெறப்பட்டது.
    3) முதன் முதலில் நாணயங்களின் பயன்பாடு இந்நாகரிகத்திலேயே ஆரம்பித்தது
    4) கனவுகளுக்குப் பலன் கூறும் பழக்கம் இம் மக்களிடம் காணப்பட்டது.
    5) விளக்கெண்ணெய், பேரீச்சம்பழம், அத்திப்பழம் என்பன மருந்துகளாகப் பயன்பட்டன.

agaram.lk

03. மக்கபேயர் என்பதன் பொருள்
    1) யூத சட்டங்களை நிலைநாட்டுதல்
    2) ஆலய வழிபாட்டை முன்னின்று நடாத்துதல்
    3) இஸ்ராயேலருக்கு அன்பு காட்டுபவர்
    4) அறியாதோருக்கு இறைவார்த்தையை அறிவித்தல்
    5) அவரது கையினால் இஸ்ராயேலுக்கு மீட்பு உண்டாகப் போகிறது.

04. கிறிஸ்துவின் பகிரங்க வாழ்வின் ஆரம்ப பகுதியில் அவர் போதித்த இடம்
    1) கலிலேயா 2) யூதேயா 3) சமாரியா 4) கானான் 5) ஜெருசலேம்

05. பாலஸ்தீன அரசு வட அரசு தென்னரசாக பிரிவுற்றது
    1) கி.மு 950 2) கி.மு 922 3) கி.மு 722 4) கி.மு 740 5) கி.மு 832

06. நீதித் தலைவர் வரிசையில் அடங்காதவர்
    1) மோயீசன் 2) யோசுவா 3) தெபோரா 4) கெதயோன 5) சாம்சோன்

07. 10வது கலாபானையை ஏற்படுத்திய பேரரசன்

1) நீரோ    2) செப்திமுஸ் செவருஸ்    3) டயக்ளேசியன்

4) வலேரியன்    5) திராஜன்

08. மக்கள் ஜெருசலேம் ஆலயத்தில் ஒன்று கூடுவது

1) வருடத்தில் ஒரு முறை    2) வருடத்தில் இரு முறை    3) வருடத்தில் மூன்று முறை

4) வருடத்தில் நான்கு முறை    5) வருடத்தில் ஐந்து முறை

09. புற இனத்தவரின் இறைவாக்கினர் என அழைக்கப்படுபவர்கள்

1) ஆமோஸ், ஒசேயா    2) மீக்கா, செக்கரியா    3) எசாயா, எரேமியா

4) பவுல், சீலா    5) பர்னபா, மாற்கு

10. A - குழு வாழ்க்கை முறை ஒன்று குறிப்பிடப்படவில்லை

B - துறவிகள் ஒரே இல்லத்தில் வாழ்ந்தார்கள்

C - உடல் உழைப்பை பயன்படுத்தி வேலை செய்ய வேண்டும்

D - துறவிகள் தனிமையில் வாழ்ந்தாலும் பொதுச்சட்டமொன்றிற்கு உட்பட்டிருத்தல்

மேற் கூறப்பட்டவற்றுள் புனித பசிலின் சட்டக்கோவையில் காணப்படும் விடயங்கள்.

1) Aயும் Bயும்    2) Bயும் Dயும்    3) Bயும் Cயும்    4) Cயும் Dயும்    5) Aயும் Dயும்

11. கி.பி 1872 இல் "நியூயோர்க் கிரிசுவா தொஸ்வாயி" எனும் ஆலயம் எங்கு நிறுவப்பட்டது.

1) சீனாவில்    2) யப்பானில்    3) கொரியாவில்    4) பிலிப்பைன்சில்    5) வத்திக்கானில்

agaram.lk

12. 
- கிறிஸ்து அனுபவம்
- தூய ஆவிக்குள் திருமுழுக்கு
- ஆவியின் கொடைகளின் முக்கியத்துவம்
- அறநெறி வாழ்வு
- கிறிஸ்துவின் மறு வருகை

மேற்கூறப்பட்ட விடயங்களுக்கு முதன்மை கொடுக்கும் சபையினர்

1) இரட்சணிய சேனை    2) பிறஸ்பிற்ரேறியன் திருச்சபை    3) மெதடிஸ்த திருச்சபை

4) பெந்தக்கோஸ்தே திருச்சபை    5) அங்கிலிக்கன் திருச்சபை

13. தெய்வீக அன்பின் கழகம் என்பதை ஆரம்பித்தவர்

1) இக்னேஸ் லொயலா    2) அகுஸ்தீன்    3) புனித கயித்தான்

4) 3ம் சின்னப்பர்    5) கிரகோரியார்

14. பைசாந்திய கலை மரபில், கண்ணாடிக் கலை வடிவத்தை…………………. என்றழைப்பர்

1) ஐகோன்    2) மொசேயிக்    3) பியற்றா    4) கியோற்றோ    5) வின்சி

15. திரிதெந்தின் பொதுச்சங்கம் கூட்டப்பட்ட ஆண்டாக கொள்ளக் கூடியது

1) 1345 – 1363    2) 1545 – 1563    3) 1645 – 1663    4) 1445 – 1463    5) 1745 – 1763

16. இந்தியாவுக்கு முதன் முதல் வந்த புரட்டஸ்தாந்து சீர்திருத்த சபை
   1) கல்வின் சபை    2) அங்கிலிக்கன் சபை    3) மெதடிஸ்த சபை
   4) பப்ரிஸ்ற் சபை    5) லூத்தரன் சபை

17. கிழக்காசியாவிலேயே கத்தோலிக்கரை பெரும்பான்மையாக கொண்ட நாடு
   1) இந்தியா    2) கொரியா    3) பிலிப்பைன்ஸ்    4) ஜப்பான்    5) சீனா

18. பெயர் செபா பள்ளத்தாக்குக்கு தெற்கே அமைந்துள்ள பாலை நிலப்பகுதி எவ்வாறு அழைக்கப்படுகின்றது
   1) பெலிஸ்திய சமவெளி    2) சமாரியா    3) எஸ்திரலோன் புல்வெளி
   4) பெத்தானியா    5) நேகேப்

19. மேற்கு ஐரோப்பா நாடுகளின் முதல் பல்கலைக்கழகமாக ஏற்றுக் கொள்ளப்படுவது
   1) ஒக்ஸ்பர்ட் பல்கலைக்கழகம்    2) பொலஞ்ஞா பல்கலைக்கழகம்
   3) பரிஸ் பல்கலைக்கழகம்    4) கேம்பிறிஜ்ட் பல்கலைக்கழகம்
   5) சலமன்கா பல்கலைக்கழகம்

20. “கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும்” எனப் பவுல் கிறிஸ்துவின் வாழ்விலும் செயலிலும் வெளிப்பட்ட அவரது மன நிலையைக் காட்டி விளக்குவது
   1) அன்பை    2) மீட்பை    3) சகோதரத்துவத்தை    4) தாழ்மையை    5) மன்னிப்பை

21. பாவிகள் திருச்சபையின் உறுப்பினர்கள் எனக் கூறிய பேதகம்
   1) மனுக்கேய பேதகம்    2) பெலாஜியபேதகம்    3) தொனாத்திய பேதகம்
   4) நெஸ்தோரிய பேதகம்    5) ஆரிய பேதகம்

agaram.lk

22. புனித தீவு என அழைக்கப்படுவது
   1) அயர்லாந்து    2) அயோனா    3) இங்கிலாந்து    4) ஹவாய்    5) லின்டிஸ்பார்ன்

23. புனித பூமியை மீட்பதற்கான சிலுவைப் போருக்கு காரணமானவர்கள்
   1) கலிபாக்கள்    2) அராபியர்    3) இஸ்லாமியர்    4) செல்யூத் துருக்கியர்    5) மிலேச்சர்

24. துறவற வாழ்வை சீர்திருத்த தோன்றிய இயக்கங்களுள் முதலாவதும் முக்கியமானதுமாக கருதப்படுவது
   1) ஆசிர்வாதப்பர் துறவற சபை    2) குளுணி துறவற சபை    3) சிஸ்ரேஷியன் துறவற சபை
   4) வல்தேசியன் துறவற சபை    5) பிரான்சிஸ்கன் துறவற சபை

25. போர்த்துக்கேயரிடமிருந்து இலங்கை மக்களுக்கு கிடைத்தது
   1) பொருளாதார வசதி    2) சமத்துவப் பண்பு    3) மேல் நாட்டு கலாசாரம்
   4) ஆன்மீக வாழ்வு    5) கத்தோலிக்க விசுவாசம்

26. பபிலோனியாவுக்கு யூதர்கள் நாடு கடத்தப்பட்ட காலத்தில் அவர்களது எண்ணத்தை மாற்றி நம்பிக்கையூட்டி இறைவாக்குரைத்த இறைவாக்கினர்கள்

1) ஆமோஸ், ஒசேயா    2) மீக்கா, செக்கரியா    3) எசாயா, எரேமியா
4) எரேமியா, எசேக்கியேல்    5) நாகூம், அபக்கூக்கு

27. 'நசீர்' அல்லது நசரேய அர்ப்பணம் என்பது ……………………… ஆகும்

1) விருத்த சேதனம்    2) பலி செலுத்துதல்    3) தலைமுடியை மழித்துக் கொள்ளல்
4) ஈமச்சடங்கு    5) தினமும் செபித்தல்

28. உரோமைப் பேரசு அடித்தளம் இடப்பட்டது

1) ரோமூலஸ் என்பவரால்    2) ஜூலியஸ் சீசர் என்பவரால்    3) அலெக்சான்டர் என்பவரால்
4) மார்க் அந்தோனி என்பவரால்    5) அக்டேவியன் என்பவரால்

29. செனத்திரின் சங்கம் என்று அழைக்கப்படுவது

1) எருசலேம் சங்கம்    2) தலைமைச் சங்கம்    3) நிசேயா சங்கம்
4) எபேசு சங்கம்    5) கல்செடோன் சங்கம்

30. யூதர்களின் சடங்கு, சட்டம், விதி முறைகள் அடங்கிய தொகுப்பு

1) டிடாக்கே    2) ஹேர்மஸ் ஆயன்    3) சாக்கடல் ஏடுகள்
4) மிஸ்னா    5) இஞ்ஞாசியாரின் திருமுகங்கள்

31. மேல்வரும் கூற்றுக்களைக் கருதுக

A - சிங்கள சஞ்சிகையாகிய 'பக்தி பிரபோதன்' என்பதன் ஆசிரியர்
B - பிலிமத்தலாவையிலுள்ள இறையியல் கல்லூரியின் அதிபர்
C - மத்தேயு நற்செய்தியை சிங்கள மொழிக்கு மொழி பெயர்த்தவர்
D - இலங்கையின் முதலாவது சிங்கள ஆயர்
E - அக்குவைனஸ் உயர்தரக் கல்லூரியை கொழும்பு பொரளையில் நிறுவினார்

மேல் வருவனவற்றுள் ஆயர் எட்மன் பீரிஸ் ஆண்டகை பற்றிய தவறான கூற்றுக்கள்.

1) Aயும் Cயும்    2) Aயும் Dயும்    3) Bயும் Eயும்    4) Cயும் Dயும்    5) E மட்டும்

32. ஐரோப்பிய பழங்குடி மரபினர் பற்றிய மேல்வரும் கூற்றுக்களைக் கருதுக

A - விவசாயத்திலும் மந்தை வளர்ப்பிலும் ஈடுபட்டனர்.
B - ஒவ்வொரு குலமும் ஓர் அரசனால் ஆளப்பட்டது.
C - மக்கள் சுதந்திரமும் சுயமரியாதையும் கொண்டு விளங்கினர்.
D - அதிகமான குலங்கள் இராணுவத்தைக் கொண்டுள்ளன.
E - உயர்கல்வி நிலை காணப்பட்டது

இவற்றுள் சரியான கூற்றுகளாவன

1) A, B, C    2) A, B, D    3) A, C, D    4) B, D, E    5) C, D, E

33. வட அரசு அசீரியரின் ஆட்சிக்குட்பட்டது.

1) கி.மு 822    2) கி.பி 822    3) கி.மு 922    4) கி.பி 850    5) கி.மு 722

34. ஆண்டவரின் பாடுகள், மரணம் உயிர்ப்புப் பெருவிழா வசந்தகால பௌர்ணமியின் பின்வரும் முதலாம் ஞாயிறன்று கொண்டாடப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது

1) நிசேயா பொதுச் சங்கத்தில் 2) இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில்
3) முதலாம் வத்திக்கான் சங்கத்தில் 4) கொன்ஸ்தாந்தி நோபின் சங்கத்தில்
5) எபேசு பொதுச் சங்கத்தில்

35. பிலிப்ஸ் பல்தேயுஸ் அடிகளார் இலங்கைக்கு வருகை தந்ததன் நோக்கமாக கருதப்படுபவை

A - பாடசாலைகளைக் கட்டுவதற்கு
B - இராணுவத்தைப் பொறுப்பேற்பதற்கு
C - கல்வின் மதத்தைப் பரப்புவதற்கு
D - ஆலயங்களை அமைப்பதற்கு
E - வியாபார தளங்களைப் பொறுப்பேற்பதற்கு

1) Aயும் Bயும் 2) Bயும் Dயும் 3) Cயும் Dயும் 4) Aயும் Cயும் 5) Bயும் Cயும்

36. "கட்டளை பிறக்க, தலைமை வானதூதரின் குரல் ஒலிக்க, கடவுளுடைய எக்காளம் முழங்க ஆண்டவர் வானின்று இறங்கி வருவார்" எனப் பவுல் கூறியிருப்பது.

1) தெசலோனியருக்கு 2) கொரிந்தியருக்கு 3) எபேசியருக்கு
4) உரோமையருக்கு 5) கொலோசேயருக்கு

37. மேல் வரும் கூற்றுக்களைக் கருதுக

A - ஒரிஜன் திருச்சபையால் நியமிக்கப்பட்ட முதல் ஆசிரியரும் அதிபரும்
B - ஆரிய பேதகத்திற்கு எதிரான போதனைகளை முன்வைத்தல்
C - ஆரிய பேதகத்திற்கு வழி வகுத்தமை
D - பிளேட்டோவின் மெய்யியலை கருவியாக பயன்படுத்தல்
E - இறையியலில் அரிஸ்ரோட்டிலின் மெய்யியலைப் பயன்படுத்தல்

மேல்வருவனவற்றுள் அந்தியோக்கியா இறையியற் கல்லூரியுடன் தொடர்புடைய கூற்றுகள்

1) Aயும் Bயும் 2) Cயும் Eயும் 3) Bயும் Dயும் 4) Cயும் Dயும் 5) Aயும் Eயும்

38. புனித அந்தனாசியுஸ் எழுதிய நூல்களல்லாதது

1) இறை வார்த்தை மனுவுருவாதல் 2) வேதவிளக்கம்
3) புனித வனத்து அந்தோனியார் வரலாறு 4) பேதகமறுப்பு
5) ஆரிய பேதகத்திற்கு எதிரான நூல்கள்

39. தோமஸ் அக்குவினாஸின் சிந்தனைச் சிறப்பிற்கு பொருத்தமற்றது

1) இறையியலில் அரிஸ்ரோட்டிலின் மெய்யியல் சிந்தனை.
2) விசுவாசம் - மானிட அறிவு ஒன்றுக்கொன்று எதிரல்ல
3) மெய்யியல், இறையியல் அறிவினை செப, தியான நற்கருணையில் பெறல்
4) மனித அறிவுச் சிந்தனையில் படைப்பை விளக்கல்
5) விஞ்ஞானம் மெய்யியலும் கடவுளைக் காண வைக்கும்.

agaram.lk

40. தினந்தோறும் திவ்விய நற்கருணையை பெற்றுக்கொள்ளத் தகுதியான முறையில் அனைவரும் வாழ வேண்டும் என்பதை செய்தியாக தரும் நூல்

1) கிறிஸ்து வழி வாழ்வு 2) மூவொரு இறைவன் 3) இறைவனின் நகரம்
4) ஆன்மீகக் கீதம் 5) மகனின் இறைத்தன்மை

41. நிலபுலன்களை உரிமையாக்கிக் கொண்ட குருக்கள் துறுவிகள் இறைவனின் மீட்பைப் பெறமாட்டார்கள் எனக் கூறியவர்

1) மாட்டின் லூதர் 2) ஆசிர்வாதப்பர் 3) ஆர்னோல்ட்
4) சுவிங்கிளின் 5) பீற்றர் வால்டோ

42. பல்கலைக்கழகம் பற்றிய கூற்றில் தவறானது

1) 'Universitas' என்ற இலத்தீன் சொல்லிலிருந்து பெறப்பட்டது,
2) கல்வி அபிவிருத்தியின் ஒரு விளைவாக பல்கலைக்கழகங்கள் தோற்றம் பெறல்
3) ஒன்றுக்கு மேற்பட்ட பீடங்களைக் கொண்டிருக்கவில்லை.
4) ஆசிரியருக்கு கற்பித்தல் தொடர்பான பயிற்சியை அளிக்க முன்வந்தமை.
5) கதீட்ரல் பாடசாலைகளினால் வழங்க முடியாதிருந்த உயர் கல்வியினை வழங்கியமை.

43. சமூகப் பணிகளில் முன்னணி வசித்து இறையியலுக்கு ஆர்வம் காட்டாத பல்கலைக்கழகம்

1) பரிஸ் 2) பொலஞ்ஞா 3) ஒக்ஸ்போர்ட்
4) கேம்பிறிட்க் 5) சலமன்கா

44. மேல்வரும் கூற்றுகளைக் கருதுக

A - கிறஹம் பெல் செவிப்புலன் அற்றோருக்காக ஒரு பாடசாலையை நிறுவினார்.
B - சேர் ஐசக் நியூட்டன் திருவிவிலியம் விஞ்ஞானம் பற்றிய கற்கை நெறிகளை விரும்பினார்.
C - அருட்பணி சார்டேனுக்கு 1922ல் பௌதீக விஞ்ஞானம் பற்றிய நோபல் பரிசு கிடைத்தது
D - அல்பர்ட் அயின்ஸ்டயின் மனிதனின் தோற்றம் எனும் நூலை எழுதினார்
E - அலெக்சான்டர் பிலெமின் 28 வயதில் சத்திரசிகிச்சை வைத்திய நிபுணரானார்.

மேல்வருவனவற்றுள் தவறான கூற்றுகள்

1) Aயும் Bயும் 2) Aயும் Eயும் 3) Bயும் Eயும் 4) Cயும் Dயும் 5) A மட்டும்

45. புனித அகுஸ்தீனார் பற்றிய பிழையான கூற்று

1) இலத்தீன் மரபுத்திருச்சபையில் மிகவும் திறமையான தந்தையாவார்
2) தன்னிலை ஏற்பு எனும் நூலில் தனது இளம் பருவம் பற்றி எழுதியுள்ளர்
3) வாழ்வின் ஒரு நிலையில் மனுக்கேய பேதகத்தை பின்பற்றினார்
4) கிரேக்க மெய்யியலுக்கு எதிராகப் பல நூல்களை எழுதினார்
5) தூய திரித்துவம் பற்றி அதிக விடயங்களை எழுதியுள்ளார்

agaram.lk

46. • சித்திரம் அழகாகவும் ஒளியூட்டுவதாகவும் இருக்கும்

• சித்திரத்தின் இயற்கைத் தன்மையை விட கம்பீரத்தன்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

• அணியப்பட்டுள்ள ஆடையில் சுருக்கங்கள் இல்லை

மேற்கூறப்பட்ட பண்புகள் எந்தக் கலைக்குரியவையாக கருதப்படுகின்றன

1) மொசேயிக் ஓவியக்கலை 2) வர்ணக்கண்ணாடிக்கலை 3) பைசென்தியன் கலை
4) சித்திரக் கலை 5) ஐகோன் உருவக்கலை

47. ஆரம்பகால கிறிஸ்தவர்களின் துன்பகரமான வாழ்வை பிரதி பலிக்கும் ஓவியம்

1) மொனாலிசா ஓவியம் 2) இறுதி இராவுணவு ஓவியம் 3) டொமிறில்லாவின் கல்லறை
4) கிறிஸ்தவ சுவரோவியங்கள் 5) புளோரன்ஸ் நகர ஆலயம்.

48. இலங்கையில் நாடகத்தின் வழியாக கல்வி கற்கும் முறையை (Role Play) அறிமுகப்படுத்தியவர்கள்

1) பிரான்சிஸ்கன் சபை 2) இயேசு சபை 3) தியான சபை
4) ஆசிர்வாதப்பர் சபை 5) டொமினிக்கன் சபை

49. இலங்கையில் கிறிஸ்தவப் பாடசாலைகள் அரச மயமாக்கப்பட்டது

1) 1958 இல் 2) 1960 இல் 3) 1970 இல் 4) 1965 இல் 5) 1962 இல்

50. இலங்கைக்கு வருகை தந்த முதலாவது பெண்கள் துறவறசபை

1) நல்லாயன் கன்னியர் சபையினர்
2) பிரான்சிஸ்கன் சபை சகோதரிகள்
3) சகாய அன்னை துறவற சபை
4) அன்பின் கன்னியர் சபை
5) திருக்குடும்ப கன்னியர் சபையினர்

agaram.lk

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

**Field Work Centre**

FWC

# தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
# Term Examination, March- 2018

| தரம் :- 13 (2018) | கிறிஸ்தவ நாகரிகம் II | நேரம் :- 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

❖ **பகுதி 'I' இலிருந்து *2* வினாக்களையும் பகுதி II இலிருந்து *3* வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக *5* வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி I

01. 1) கி.பி 1ம் நூற்றாண்டில் உரோமை நிர்வாகத்தின் நான்கு பிரதான அம்சங்களைத் தருக.
    2) மிஸ்னா என்னும் நூலில் குறிப்பிடப்படும் தலைமைச் சங்கத்தின் சட்ட விதி முறைகள் நான்கு தருக.
    3) நீதித் தலைவர்களின் பணிகள் நான்கு தருக.
    4) இஸ்ராயேலரை ஆட்சி செய்த அரசர்கள் நால்வரைக் குறிப்பிடுக.
    5) "நம் ஆண்டவரைப் பின்பற்றுவோம்" எனும் கூற்றைத் தினமும் நினைவுபடுத்தி ஆசிர்வாதப்பர் துறவற சபையினர் தமது மடங்களில் கிரமமாக வாழ்ந்த பண்புகள் 4 தருக.

02. 1) போர்த்துக்கேயர் காலத்தில் இயேசு சபையினரின் கல்வி முறையில் காணப்பட்ட சிறப்பம்சங்கள் நான்கு குறிப்பிடுக.
    2) ஒல்லாந்தர் காலத்தில் நடைமுறையிலிருந்த நான்குவிதமான பாடசாலைகளையும் குறிப்பிடுக.
    3) ஆங்கிலேயர் காலத்தில் மறைபரப்புவதற்காகவும் கல்விப்பணிக்காகவும் இலங்கைக்கு வருகைதந்த பெண் துறவற சபைகள் நான்கு தருக.
    4) பிரான்சிஸ்கன் சபையினரால் நடத்தப்பட்ட கல்வி முறையில் காணப்பட்ட குறைபாடுகள் நான்கு தருக.
    5) இந் நாட்டில் பாடசாலைகள் அரசாங்கத்தினால் சுவிகரிக்கப்பட்டதனால் ஏற்பட்ட நன்மைகள் இரண்டும் தீமைகள் இரண்டும் தருக.

03. 1) பல்துறை சார் பங்களிப்புச் செய்த கிரேக்க நாகரிகத்தின் சிறப்புகள் நான்கு தருக.
    2) பை சென்தியன் ஆலயங்களில் காணப்படும் பிரதான அம்சங்கள் நான்கு குறிப்பிடுக.
    3) சுவாமி ஞானப்பிரகாசர் அடிகள் இயற்றிய நான்கு நூல்கள் தருக.
    4) அரிஸ்ரோட்டில் முன்வைத்த காரண-காரிய தொடர்புக் கொள்கையை குறிப்பிட்டு விளக்குக.
    5) மறுமலர்ச்சிக் கால சித்திரக் கலைஞர்கள் இருவரைக் குறிப்பிட்டு அவர்கள் வரைந்த ஓவியங்கள் இவ்விரண்டு குறிப்பிடுக.

agaram.lk

## பகுதி II

04. புனித பவுல் கிறிஸ்தவ விசுவாசம் பற்றிய தெளிவை ஏற்படுத்தி ஆரம்ப கால கிறிஸ்தவ சமூகங்களை மேம்படுத்தினார்.

1) புனித பவுலின் குடும்ப வாழ்வு பற்றிய கருத்துக்களை எபேசியருக்கு எழுதிய திருமுகத்தின் அடிப்படையில் விளக்குக.
2) கிறிஸ்தவ வாழ்வுக்கு சகோதரத்துவமும் ஒற்றுமையும் அவசியமானது இதனை புனித பவுலின் படிப்பினைகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.
3) தூய ஆவியார் எமக்கு அருளும் அருட்கொடைகளை 1 கொரிந்தியர் 12 இன் அடிப்படையில் விளக்குக.
4) பின்வருவனவற்றை புனித பவுல் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்தை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.
   அ) மனுவுருவில் வெறுமையாதல் ஆ) இறுதியான சிலுவை இழிவு

05. துறவற வாழ்வு திருச்சபையின் ஆன்மீக வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்புச் செய்துள்ளன.

1) வனத்து தந்தையர்கள் குறித்து சிறு விளக்கம் தருக.
2) சிஸ்ரேஷியன் துறவறசபை ஆரம்பமானதன் நோக்கத்தை குறிப்பிட்டு, இச் சபையினால் அன்றைய சமுதாயத்திற்கு ஆற்றப்பட்ட சேவைகளையும் குறிப்பிடுக.
3) திருச்சபையின் மறுமலர்ச்சிக் காலத்தில் இயேசு சபையினர் ஆற்றிய பணிகளை சுருக்கமாகத் தருக.
4) ஆசிர்வாதப்பர் துறவற சபையின் முன்மாதிரிகையான உடல் உழைப்பு ஐரோப்பிய நாகரிகம் உருவாவதற்கு உதவிய விதத்தை விளக்குக.

06. நாசரேத்தூர் இயேசுவின் கற்பித்தல்களை விளக்குவதற்குப் பாலஸ்தீன அரசியல், சமூக கலாச்சாரப் பின்புலம் தொடர்பான அறிவு உதவியாயிருக்கும்.

1) யூதர்கள் கொண்டாடிய முக்கிய விழாக்களைக் குறிப்பிட்டு, அவற்றுள் இரண்டினை சுருக்கமாக விளக்குக.
2) கிறிஸ்துவின் கால யூத சமுதாயப் பிரிவுகளை குறிப்பிட்டு விளக்குக.
3) சமாரியர் பற்றி சிறு விளக்கவுரை தருக.
4) யூதர்களின் ஓய்வு நாள் அனுசரிப்பு முறையை விளக்கி இயேசுக்கிறிஸ்துவின் ஓய்வு நாள் பற்றிய கருத்தையும் குறிப்பிடுக.

07. "மேல் நாட்டார் ஆட்சிக்காலத்தில் கல்விப்பணி முக்கிய இடம் வகித்தது'

1) இலங்கையில் கி.பி 1505க்கு முன்னர் கிறிஸ்தவர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கான சான்றுகளை விளக்குக.
2) போர்த்துகேயர் கால பாடசாலை முறைகளைக் குறிப்பிட்டு விளக்குக.
3) ஒல்லாந்தரின் ஆட்சிக்காலம் இலங்கையின் முன்னேற்றத்திற்கு பெரும் பங்களிப்புச் செய்தமையை விளக்குக.
4) இலங்கையில் கல்விக்கு இன்றைய திருச்சபை ஆற்றியுள்ள பணிகளை விளக்குக.

08. திருச்சபையின் கல்வி விஞ்ஞானம், இறையியல் கலை வளர்ச்சிக்கு பல கிறிஸ்தவர்கள் உறுதுணையாக அமைந்துள்ளனர்.

1) மிக நீண்டகாலமாக தனித்துவம் பெற்ற பல்கலைக்கழகமாக விளங்கும் பரிஸ் பல்கலைக் கழகத்தின் தோற்றமும் பணியினையும் விளக்குக.
2) விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த அருட்பணி சார்டேன் என்பவரது பணியை விளக்குக.
3) தோமஸ் அக்குவினாஸின் ஆக்கங்களை குறிப்பிட்டு விளக்குக.
4) மத்திய காலத்தில் ஆரம்பமாகிய கிறிஸ்தவ சிற்பக்கலை பற்றி சிறு விளக்கவுரை எழுதுக.